# ஈழத்தமிழர்களே சிந்தியுங்கள்

ரோம் பற்றி எரிகையில் நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்ததானாம். அப்படியும் நடந்திருக்குமா என்று ஒரு சந்தேகம் எழுவதுண்டு. ஆனால் அது உண்மை என்பது இப்போதுதான் புரிகிறது. நாம் பிறந்து தவழ்ந்து வளர்ந்த தாயகமாம் யாழ் வளை குடாவில் போர்.

இளைஞர்களும்—யுவதிகளும் உயிரைக் கொடுத்து மண்ணை மீட்க தியாக வேள்வி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். உயிரைத் துச்சமென மதித்து—நச்சுக்குப்பிகளை கழுத்திலே கட்டிக்கொண்டு—வாழ்வா? சாவா? என்று உயிர்த் தியாகங்கள் ஒரு பக்கம்—
நம் மண்ணில் வாழும் அப்பாவி உறவுகள் மீது குண்டுகளைப் பொழிந்து சிங்கள அரசாங்கம் நடத்தும் அக்கிரமங்கள் இன்னொரு பக்கம் — நம் தமிழ்ப் பெண்கள், கணவர்களும்—பெற்றார்களும் பார்த்திருக்கச் சிங்கள வெறியர்களால் துடி துடிக்கக் கசக்கி, குடும்பங்களாகக் கொலை செய்யப்பட்ட செம்மணி புதைகுழிக் கதைகளின் கண்ணீர்க் கதைகள் மறு பக்கம்—

இந்த அவலங்களும்—கோரங்களும் நடந்து கொண்டிருக்கையில் நமக்கு என்ன கவலை?

நமக்கு மீனாவும்-மனிஷா கொய்ராலாவும்-ராதிகாவும்-ரம்பாவும் போதுமே என்கிற மனப்பான்மை.

அங்கு நடக்கின்ற கொடுமைகளை இங்கு சொல்லி, இந்த நாட்டுக்குள் 'தஞ்சம்' அடைந்த நாங்கள் இப்போது நம் மண்ணின் துயரங்களை மறந்து சினிமா கவர்ச்சி மோகத்தில் மூழ்கிக் கிடப்பது நியாயமா!

என்று தணியும் இந்த சினிமா மோகம்? கடினமாக உழைத்து பெறுகின்ற பணத்தை, பொன்னான நேரத்தை, அறிவுத் திறனை பாழ் அடிப்பது நியாயமா?

## புகலிடத் தமிழர்களே! இனியும் நாம் சிந்திக்காமல் இருந்தால் மலரப்போகும் தமிழீழத்துக்கு நாம் செய்கின்ற மாபெரும் துரோகம்.

நாகரிகமான நாட்டில் வாழ்ந்து கொண்டு அநாகரிக கவர்ச்சிக்கு எங்களை அடிமைப் படுத்தலாமா? அடுத்து அடுத்து நடக்கின்ற சினிமா கவர்ச்சி நிகழ்ச்சிகளை பார்க்கத்தான் வேண்டுமா?

கவர்ச்சி காட்டும் கன்னியர்களைப் பார்ப்பதற்காக கண் விழித்து—இரவு பகல் என்று பாராது (5 பவுண், 10 பவுணா) 50 பவுண்கள், 100 பவுண்கள் என்று ரம்பாவுக்கும்—சிம்ரனுக்கும் கொட்டுகிறீர்கள்?

## அந்தப் பணத்தில் ஒரு சிறு பங்காவது எம் மண்ணில் அவலப்படும் மக்களுக்கு போனாலும் ஆறுதலாவது இருக்கும்

இப்போதுதான் நல்ல தமிழ் 24 மணிநேர T.V. க்கள் ரேடியோக்கள் இந்த நாட்டில் ஒளி, ஒலி பரப்பாகின்றன. உழைத்துக் களைத்துப் போன நேரங்களில் அவற்றைப் பார்க்கலாமே எனவே—
எம் தமிழ் உறவுகளே நன்றாகச் சிந்தியுங்கள் அநியாயமாகப் பணத்தை கொட்டுவதை நிறுத்துங்கள். நல்ல வழியில் பொழுதைக் கழியுங்கள்! இந்நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் சிறப்புநடிகர்கள் யாராவது ஈழத்தமிழர்க்காக என்றாவது குரல் கொடுத்ததுண்டா? மக்களே சிந்தியுங்கள்!!

